



# Voice of Jagadguru

advaitam paramanandam — an e-magazine on advaita



ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)

An Unit of the e magazine Voice of Jagadguru)

## 9.நவம்பர் 2023 அன்று ஜகத்குரு ஸ்ரீ சந்திரசேகர பாரதீ மஹாஸ்வாமிகள் அவர்களின் 131ஆவது ஜெயந்தி (1892-1954)

நமக்கு ஸ்வாதந்திரியமே கிடையாது என்று சிலர் சொல்லுகிறார்கள். அப்படியானால் தோஷம் நமக்கு எப்படி வரும்? ஈசுவரன் தான் செய்விக்கிறான் என்று சிலர் சொல்வது வாஸ்தவமானால் மற்றொருவன் செய்யச் சொன்னதைச் செய்தால் நம் பேரில் அது எப்படிக் குற்றமாகும்? தவிர ஸ்வாதந்திரிய விசாரமே எப்படி ஏற்படும்?



ஈச்வர: ஸர்வபூதானாம் ஹ்ருத்தேசே அர்ஜுன திஷ்டதி |
ப்ராமயந் ஸர்வபூதானி யந்த்ராரூடானி மாயயா ||

என்றும்,


கிம் கிம் கரோதி புத்தி:


என்றும்,

ஜானாமி தர்மம் ந ச மே ப்ரவ்ருத்தி:
ஜானாம்யதர்மம் நசமே நிவ்ருத்தி: |
கயாபி தேவ்யா ஹ்ருதயஸ்த்தயா அஹம்
யதா நியுக்தோஸ்மி ததா கரோமி ||

என்றும் வசனங்கள் இருப்பதைப் பார்த்தால் நமக்கு ஸ்வாதந்திரியம் இல்லை என்றே தோன்றுகிறது. ஆனால் அப்படி நாம் இருக்கிறோமா? அப்படி இருப்பது வாஸ்தவமானால் நமக்கு ஒன்றிலும் பிரவிருத்தியிருக்கக் கூடாது. ஸ்வாமி எப்படிச் செய்கிறாரோ அப்படி நடக்கட்டும் என்று விட்டுவிட வேண்டியதல்லவா? ஆனால் மனிதன், அப்படி இருக்கிறானா? எல்லாம் தானே செய்வதாக எண்ணித்தானே மனிதன் நடக்கிறான். ஆகையால் இவன் ஸ்வாதந்திரியமில்லை என்று சொன்னால் அது ஸரியாகாது. எல்லாவற்றையும் தானே செய்வதாக நினைத்துக் கொண்டு செய்கிறான். பிறகு ஸ்வாமி செய்தார் என்று சொன்னால் அது சரியாகுமா? ஆகாதுதான்.

சாஸ்திரத்தில் சொன்னபடி கர்மாக்களைச் செய்து வந்தால் அப்பொழுதுதான் ஸ்வாதந்திரியம் இல்லை. ஏன்? இவன் தன் புத்தி யுக்திகொண்டு ஒன்றையும் செய்யவில்லை. சாஸ்திரம் ஒரு யஜமானனாகவும் இவன் ஒரு கிங்கரனாகவும் தானே ஆகிறான். கர்த்தாவாய் இருக்கும் தன்மை (ஸ்வாதந்திரியம்) சாஸ்திரத்தைப் போய் அடையுமே தவிர இவனிடத்தில் ஒருபோதும் வராது. "கர்மாக்களை நான் செய்கிறேன், நான் செய்கிறேன் " என்ற எண்ணத்தோடு செய்கிறது, கர்த்ருத்வம் மட்டும் வேண்டாம் என்றால் விடுமோ? நல்லது வந்தால்







ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)
An Unit of the e magazine Voice of Jagadguru)

"நான் செய்தேன், என்னுடைய பிரயத்னத்தால் கிடைத்தது," என்று சொல்லிக் கொள்ளுகிறது, கெட்டது வந்தால் "ஸ்வாமி செய்தது " என்று சொல்வது. இது ஸரியானதோ? ஸரியாகாது. துக்கம் வந்து கொண்டேயிருக்கிறது. அதற்குப் பிரதீகாரம் செய்வதில் மட்டும் நமக்குப் பிரவிருத்தி இருக்கிறதில்லை. ஏன்? அப்பொழுதுதான் நமக்கு ஸ்வாதந்திரியம் இல்லை என்று தெரியவருகிறது போல் இருக்கிறது. இது வஞ்சகமேயல்லாமல் ஸரியான புத்தியல்ல. இந்த வஞ்சகம் சில விஷயத்தில் மட்டும் இருக்கிறது.

இந்த்ரியஸ்யேந்த்ரியஸ்யார்த்தே ராகத்வேஷௌ வ்யவஸ்த்திதௌ!
தயோர் ந வசமாகச்சேத் தௌ ஹ்யஸ்ய பரிபந்த்தினௌ ||

என்றபடி ராகத்வேஷங்களை விட்டாலல்லவோ ஸ்வாதந்திரியம் போகும். எது வேண்டாமோ அதில் துவேஷம். எது வேண்டுமோ அதில் ராகம். இந்த இரண்டிற்கும் உட்படாமற் போனால் ஸ்வாதந்திரியம் இல்லைதான்.

நமக்கு ஸ்வாதந்திரியம் இல்லை என்பது வாஸ்தவமானால் 'இதைச் செய்,' 'இதைவிடு' என்று எப்படிச் சொல்லலாம்? இவைகள் ச்ருதி, ஸ்மிருதி, புராணங்களில் சொல்லப் பட்டிருக்கின்றனவே, அவைகளெல்லாம் பகவானுடைய ஆக்ஞைகள் அல்லவா? இந்த ஆக்ஞை ஸ்வாதந்திரியம் இல்லாதவனை உத்தேசித்து ஏற்படலாமோ ?
கூடாதல்லவா? ஆகையால் பகவானுக்குப் புத்தியில்லை என்று ஏற்படுமே தவிர நமக்கு ஸ்வாதந்திரியம் இல்லை என்று ஒப்புக்கொள்ள முடியாது. தவிர, சிக்ஷைக்கும் அப்படியே. ஈச்வர பிரேரணையால் தானே எல்லாம் நடக்கிறது. நமக்கு வந்த தோஷம் என்ன? அவன் செய்யச் செய்தான். நாம் செய்தோம். அதனால் நம் மேல் என்ன தோஷம்? இந்த கலிகாலத்தில் நாம் எப்படி நேராக நடக்கமுடியும் என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் சொல்வது வாஸ்தவமானால் கலிகாலத்திற்கு சாஸ்திரமே இல்லை என்று சொல்லிவிடலாமல்லவா? இந்தக் கலிகாலத்திற்கும் சாஸ்திரங்களில் விதி நிஷேதங்கள் சொல்லியிருக்கின்றன அல்லவா? ஈசுவரனுக்கு புத்தியே கிடையாது, ஸ்வாதந்திரியமற்ற கலிகால மனுஷ்யனைப் பார்த்து 'இப்படி நட' 'இப்படி நடக்காதே' என்று சொல்லியிருக்கிறன், என்றல்லவா ஏற்படும். அது ஸரியாகுமோ? ஆகாதல்லவா? எல்லாம் தெரிந்த ஸர்வக்ஞனுக்கு மூடத்வம் கற்பித்தல் ஸங்கதமாகுமோ? ஆகையால் நமக்கு ஸ்வாதந்திரியம் உண்டு என்று ஏற்படுகிறது,

அப்படி நமக்கு ஸ்வாதந்திரியம் உண்டு என்றால் நாம் ஏன் துக்கத்தை அனுபவிக்க வேண்டும்? எல்லாருக்கும் அது அதிஷ்டம் தானே ? அதையே ஏன் அநுபவிக்க நேருகிறது! அல்லது அது வந்தாலும் அதைத் தள்ளிவிடுவோம் என்று நினைக்கலாமே? இப்படி இரண்டு விதத்திலும் கஷ்டமாய்த்தான் இருக்கிறது. ஆகையால் நமக்கு ஸ்வாதந்திரியம் உண்டு என்றால் எதில் உண்டு. எதில் இல்லை. என்று பர்யாலோசனை செய்ய வேண்டியது அவசியமாகிறது. ஸ்வாதந்திரியம் உண்டென்றால் நாஸ்திகனுக்கும். உண்டல்லவா? அவனும்

துக்கப்படுகிறான். அவனுக்கோ ஈசுவரன் இல்லை. ஆகையால் அவனுக்குத் துக்கம் எப்படி வந்தது?

ஆகையால் எல்லாவற்றிற்கும் ஸமாதானம் என்ன என்றால். கர்த்ருத்வத்தில் ஸ்வாதந்திரியம் உண்டு, போக்த்ருத்வத்தில் ஸ்வாதந்திரியம் இல்லை என்பதுதான். இதுதான் லோகாநுபவத்திலிருந்து வெளியாகிறது. நாம் இங்கிருந்து மற்றோரிடத்திற்குப் போகிறோம். போகாமலே இருந்து விடலாமல்லவா? அது முடியவில்லை. பகவானுடைய பிரேரணையினால் தானே வருகிறதென்றால், அதுவும் நமது கர்மாதுசாரியாய் வருகிறதே தவிர, ஏதோ நினைத்தபடி வருகிறதல்ல.

துக்க வழிகளை ஏன் ஈசுவரன் காட்டுகிறான் என்றால் நம்மைப் பரீக்ஷை செய்வதற்காகத்தான். பரீக்ஷாகாலத்தில் மாணவன் த்ருடமாய்த் தெரிந்து கொண்டிருக்கிறானா என்று தெரிவதற்காக வேண்டி பரீக்ஷைகள் விபரீத மார்க்கம் 'காட்டினாலும் திரும்பாமல் இருந்தால்தானே ஜயம் கிடைக்கிறது. விபரீத மார்க்கம் காட்டினது கெட்டுப்போகட்டும் என்றா? இல்லை. தவறிப்போனாலுங் கூட ஜயம் கொடுத்துவிடுகிறதில்லையா? அதேமாதிரி துக்காநுபவத்திலும் சாஸ்திர விரோதமாய்ப் போகாமலிருந்தால் பகவானுக்கு ஸந்தோஷம் உண்டாகின்றது. பாப கர்மத்தைத் திருத்திக்கொள்ள வேண்டாமென்று பகவான் சொல்லுகிறானா? யுக்தா யுக்த புரஸ்ஸரமாய் கர்மாக்களைச் செய்ய பகவான் ஸ்வாதந்திரியம் கொடுத்திருக்கிறான். இது அர்ஜுனனிடத்தில் நன்றாய்க் காட்டப் பட்டிருக்கிறது. கீதையை உபதேசம் பண்ணுவதற்கு முன்னால் "கிருபை" என்ற பிசாசின் ஆவேசம் அர்ஜுனன் மேல் ஏற்பட்டதால் அவன் தனது முன்னால் நிற்கும் பந்து குரு வர்க்கங்களை எப்படிக் கொல்வேனென்று பிரலாபித்தான். கீதோபதேசமடைந்த பிறகு இந்த பிசாசு நீங்கி ஞானம் வந்தது. ஸர்வ விஷயத்திலும் தனக்கு ஸ்வாதந்திரியம் வேண்டியதில்லை என்று தீர்மானித்து ஸ்ரீகிருஷ்ணன் சொன்னபடி செய்தான். அவனுக்கு யாதொரு தோஷமும் வரவில்லை.

கர்மம் பலிஷ்டமானதுதான். ஆனாலும் நாம் யுக்தாயுக்தம் தெரிந்து நடந்துகொள்ள முடியாமல் போகும்படி அது நம்மைத் தடுப்பதில்லை. கர்மங்களை அநேகவிதமாய் பிரித்திருக்கிறார்கள். பொதுவாக விஹிதம், நிஷித்தம், உதாஸீனம் என்று மூன்று வகைப்படும். இவைகளைப்பற்றி முன்னால் ஒருதரம் சொல்லப் பட்டிருக்கிறது. நிஷித்த கர்மத்தை மட்டும் எப்பொழுதும் விலக்கிவிட்டால். அப்புறம் நமக்கு நிச்சயமாய் க்ஷேமம்தான் என்பதில் ஸந்தேஹமே வேண்டியதில்லை. நிஷித்த கர்மத்தை நீக்கிவிட்டால் அப்புறம் நாம் செய்யக்கூடியது விஹிதமோ அல்லது உதாஸீனமோ தானே ! அவைகளினால் கெடுதல் ஒன்றும் ஏற்பட்டுவிடாதே.

அதேபோல் கர்மத்தை பிராரப்தம், ஸஞ்சிதம், ஆகாமி என்று மூன்றாகவும் பிரித்திருக்கிறார்கள். பிராரப்தம் என்றால் நாம் முன் ஜன்மங்களில் செய்த கர்மங்களில் எவை பலன் கொடுக்க ஆரம்பித்து விட்டனவோ அவைகள்தான்.

அவைகளுக்குத்தான் பிராரப்தம் என்று பெயர் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதை அநுபவித்தே தீரவேண்டும். ஸஞ்சிதம் பலன் கொடுக்க ஆரம்பிக்கவில்லை. ஆனால் செய்தாய்விட்டது. பலன் கொடுக்கக் காத்துக் கொண்டிருக்கிறது. ஆகாமி இனிமேல் வரப்போகிற கர்மம் ஞானிக்குப் பின்னால் சொன்ன இரண்டும் ஞானாகநியால் பஸ்மமாய்ப் போய்விட்டபடியால் அவனை அவைகள் பாதிக்க முடிகிறதில்லை. பிராரப்தத்தை மட்டும் அநுபவித்தே தீரவேண்டும். அப்படித்தான் அவைகள் கழியவேண்டும்.

இந்த ஞானம் வந்துவிட்டதென்று எப்பொழுது சொல்லலாமென்றால் 'நான் கர்த்தாவல்ல' என்ற ஸாக்ஷாத்காரம் வந்தால் அப்பொழுது சொல்லலாம். நிந்தை, ஸ்துதி இவைகளில் துக்க ஸந்தோஷங்கள் இல்லாதிருந்தால் அப்பொழுது சொல்லலாம். ஸ்தூல ஸூக்ஷ்ம சரீராபிமானத்தை விட்டால் அப்பொழுது சொல்லலாம். மனஸுக்கு துக்கம் வருகிறது, அபிமானம் இருக்கிறது, போகத்தில் இச்சை இருக்கிறது, இவைகள் எல்லாம் இருக்கும்போது எப்படி ஞானம் வந்துவிட்டதென்று சொல்லலாம்? சாஸ்திர ஸம்மதமான கர்மாக்களைச் செய்து அதன் வழியாய் சித்தசுத்தி அடைந்து அதன் மூலமாக ஞானம் வருகிறது. அந்த ஸமயத்தில் தான் கர்மாக்கள் இவனை விட்டு விலகுகின்றன. அதுவரையில் இவனுக்கு கர்ம ஸம்பந்தம் உண்டு. இந்த ஞானம் கர்மாநுஷ்டானத்தால் தான் வருகிறது.

சித்த சுத்தி அடைந்து ஞானத்தை அடைந்தவன் ஸதா ஸமாதி ஸ்திதியிலேயே இருப்பான். ஸமாதி ஸ்திதியிலிருப்பவன் எப்படி கர்மம் செய்யமுடியும்? அவன் ஸூர்யோதயாதி சலனங்களைக் கவனிக்க முடியுமோ? ஒரு நாளோ, பல நாளோ அப்படியே நின்றுவிடும். அவனைக் கர்மங்கள் தானாக விட்டுவிடுகின்றன. நெருப்புப் பிடித்த ஒரு மடித்த வஸ்திரம் எரிந்துபோனாலும் எப்படி வஸ்திரரூபம் மட்டும் அப்படியே இருக்குமோ, எப்படி அது வஸ்திரரூபமே தவிர வஸ்திரமாகிறதில்லையோ அப்படிப் போல் இருப்பான். வாஸனாக்ஷயமாகி கர்மம் தக்தமாய்விட்டால் ஞானிக்கு பிரபஞ்சம் அப்படித்தான் தோன்றிக் கொண்டிருக்கும்.

நமக்கெல்லாம் பிரபவ வருஷம் வருவதும் அதற்குப்பின் ஒன்றன்பின் ஒன்றாய் விபவாதி வருஷங்கள் வந்து அக்ஷய வருஷம் வருவதும் இவ்விதம் திரும்பித் திரும்பி அக்ஷய வருஷம் வருவதுமாயிருப்பதால் விஷேபமடைகிறோம். அப்படி வந்து வந்து போவதால் நமக்கு துக்கம் உண்டாகிறது. ஞானிகளுக்கு அப்படியல்ல, அவர்களுக்குப் பிரபஞ்சம் தோன்றினாலும் மனதைத திருத்திக் கொள்ளுகிறார்கள். அதனால் அவர்களுக்குத் துக்கம் உண்டாகிறதில்லை. ஆத்ம ஞானம் வந்ததும் துக்கம் அஸ்திரம் (நிலையற்றது) என்று தெரிந்து கொள்ளுகிறார்கள், அதனால் துக்க கிலேசங்கள் அவர்களுக்கு வருவதில்லை. பிரபஞ்சம் பொய் என்று ஞாபகப்படுத்திக் கொள்ளுகிறர்கள். நாம் நமக்கு துக்கம் வந்துவிட்டதே என்று அழுகிறோம். வந்த துக்கம் ஸ்திரமாய் இருக்கப்போகிறதோ! அப்படியானால் அழவேண்டியதுதான். அதுதான் போய்விடப்போகிறதே! அதற்காக ஏன் அழவேண்டும்? துக்கம்

வந்ததற்கு மட்டும் அழுவானேன்? ஸுகம் வந்ததற்கும் அழவேண்டியதுதானே! ஏன்? அதுவும் போய் விடப்போகிறது அல்லவா?

இப்படித்தான் நியாயம் இல்லாததற்கெல்லாம் அழுது துக்கிப்பது பிரபஞ்ச வழக்கம். எப்படியென்றால் பத்துப்பேர்கள் ஒரு நதியைத் தாண்டினார்கள். அக்கரைபோய்ச் சேர்ந்தார்கள். எல்லாரும் ஸரியாய் வந்து சேர்ந்தார்களா என்ற ஸந்தேஹம் தோன்றிற்று. தங்களை எண்ணிக் கணக்கிட ஆரம்பித்தார்கள். ஒவ்வொருவனும் தன்னை விட்டுவிட்டு எண்ணினதால் ஒன்பது பேர்கள்தான் கணக்குக்கு வந்தது. ஆகையால் இந்தப் பத்துப் பேரும் பத்தாவது மனிதனை நதி அடித்துக்கொண்டு போய்விட்டது என்று எண்ணி துக்கித்தார்கள். வாஸ்தவத்தில் துக்கத்திற்கு காரணமாவது, நியாயமாவது கொஞ்சமேனும் உண்டோ? அவர்களுடைய அஞ்ஞானத்தால்

தஸமோ நஷ்ட:

என்று நினைத்துக் கொண்டு மிகவும் துக்கப்பட்டார்கள். வேறு இன்னொருவன் இவர்களின் துக்கத்தைப் பார்த்து மனம் இரங்கி கருணையுடன் எண்ணிக்காட்டி 'பத்தாவது மனிதன் நீ' என்று சுட்டிக்காட்டி



தசமஸ் த்வமஸி

என்று சொன்னதும், பத்தாவது மனிதன் கிடைத்துவிட்டான் என்று அவர்கள் எல்லோரும் ஸந்தோஷப்படுகிறார்களல்லவா? இந்த ஸந்தோஷத்திற்கும் ஏதாவது காரணமாவது நியாயமாவது உண்டோ? முன்னமே இருந்த பத்துப் பேர்கள்தானே இப்பொழுதும் இருக்கிறார்கள். ஆனாலும்

தஸமோ அஹம்

என்ற எண்ணம் புதிதாக ஏற்படுகிறது. விசாரித்தால் முன்னமே 'தஸமோ நஷ்ட: ' என்ற சோகத்திற்கும், இப்பொழுது 'தஸமோ லப்த:' என்ற ஸந்தோஷத்திற்கும், யாதொரு நியாயமுமில்லை. மூடிக்கொண்டிருந்த அஞ்ஞானமாகிற ஆவரணம் போயிற்று. அவ்வளவுதான். அந்த அஸதாவரணம் தான் துக்கஹேது. அதன் நிவாரணம் தான் ஸந்தோஷத்திற்குக் காரணம். ஜீவன் முக்தனும் அப்படித்தான் ஸந்தோஷப்படுகிறான். அவனுக்கு இந்த பிரபஞ்சத்திலிருந்த ஸத்பாவம் ஒழிந்து தானே எல்லா இடத்திலும் எல்லாமாயும் இருக்கிறதாக தெரிந்து கொண்டிருப்பதால் ஆனந்தமயமாய் ஸுகமாக இருக்கிறான்.

இப்பேர்ப்பட்ட ஞானிக்கும் பிராரப்தம் பலமானது. அதை அவன் அநுபவித்தே தீரவேண்டியது. மற்ற ஸஞ்சித ஆகாமிகள் இரண்டும் ஞானாக்நியால்


ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)

An Unit of the e magazine Voice of Jagadguru)

தஹிக்கப்பட்டுப் போய்விடுகின்றன. ஸத்கர்மாக்களால் பாபம் க்ஷயமடையுமாதலால்தான், நாம் நம்முடைய ஸங்கல்பத்தில்

துரித க்ஷய த்வாரா

என்று சொல்லுகிறோம். நித்ய நைமித்திக கர்மானுஷ்டானங்களால் வருகிற புண்யங்கள் வளர்ந்து கொண்டே போகின்றன. நித்ய கர்மா என்றால் ஸந்தியாவந்தனம், ஸ்நானம், ஔபாஸநம் முதலியன. நைமித்திகம் என்றால் கிரஹண ஸ்நானம் முதலியன. இந்தமாதிரி கர்மங்களைச் செய்வதால் முந்தி செய்த பாபம் போகிறது. இப்பொழுது செய்யும் கர்மங்கள் புண்ய கர்மங்களானதால் பாபம் உண்டாவதில்லை. ஆகையால் புண்யம் விருத்தியாகிறது. இப்படிச் செய்தாலும் மஹாபாபங்கள் போகாது. இதிலும் பிராரப்தம் பலிஷ்டம். எல்லா கர்மங்களும் ஒரேமாதிரி பலிஷ்டம் ஆகிறதில்லை.

பிராரப்தத்தில்கூட மூன்று விதம் என்று சிலர் சொல்லியிருக்கிறார்கள். அதில் ஒன்றை மட்டும் அநுபவித்தே தீரவேண்டும். மற்றவைகளை எல்லாம் நீக்கலாம். எப்படியென்றால் ஒரு மனிதனுக்கு வியாதி என்று வைத்துக்கொள்வோம். அது தாதுவைஷம்யத்தால் வந்திருந்தால் மருந்து கொடுத்தால் குணமாகும். கர்மத்தால் வந்த வியாதியாய் இருந்தால் என்ன சிகித்ஸை செய்தாலும் போகிறதில்லை. இந்த ரோகங்களுக்கு மாந்தாதா என்ற மஹாத்மா எழுதியிருக்கும் கர்மவிபாகம் என்ற சாஸ்திரத்தில் சொன்னபடி செய்தால்தான் நீங்குகிறது. அதாவது மேலே சொன்ன கர்மவிபாகம் என்ற சாஸ்திரத்தால் பிராரப்தத்தால் வந்த துக்கத்தைக்கூட நிவாரணம் செய்யலாம் என்று தெரிகிறதல்லவா? நீக்க முடியாதென்றால் அந்த கிரந்தம் நிஷ்பிரயோஜனமாய்ப் போய்விடுமல்லவா?

இந்த பிராரப்தம் மூன்று விதம் என்று சொன்னோம். அவை இச்சா பிராரப்தம், அநிச்சா பிராரப்தம், ரேச்சா பிராரப்தம் என்பதாம். இதில் இச்சா பிராரப்தத்தை நீக்கலாம். அநிச்சா பிராரப்தம் என்பது தைவாதீனமாக ஏற்படக்கூடியது. இதை நீக்க முடியாது. இதை மட்டும் அநுபவித்தே தீரவேண்டும். பரேச்சா பிராரப்தம் என்பது தாக்ஷிண்யத்திற்காகச் செய்வது, இதைச் செய்யாமலே இருக்கலாம் அல்லவா? ஒருவனுக்கு ஜாமீனாக நிற்பதுபோல். அப்படி நில்லாமலே இருந்து விடலாமல்லவா? அநிஷ்டமாய் இருந்தாலும் தாக்ஷிண்யத்திற்காகச் செய்வது. இதையும் நீக்கலாம். இங்கேதான் புருஷப்பிரயத்தனம் பிரயோஜனப்படுகிறது. இந்த இரண்டுவித பிராரப்தங்களை அதாவது இச்சா, பரேச்சா பிராரப்தங்களை மனுஷ்யப்ரயத்தனங்களால் நீக்கலாம். அநிச்சா பிராரப்தம் தானாய் வருகிறது. நாம் தடுக்க முடிகிறதில்லை. ஒருவன் தலைமேல் திடீரென்று இடி விழுகிறது. பிரவாஹத்தில் ஒருவன் அகஸ்மாத்தாய் அடித்துக் கொண்டு போகப்படுகிறான். இதெல்லாம் அநிச்சா பிராரப்தம். பிரயத்னம் செய்தும் நீங்காததுதான் அநிச்சா பிராரப்தம் என்று சொல்லலாம். எவ்வித பிராரப்தம் ஏற்பட்டாலும் ஞானி கலங்க மாட்டான். பிரஹ்லாதனுக்கு எவ்வளவு துக்க ஸாதனங்கள் இருந்தன. இருந்தாலும் அவன் துக்கப் பட்டானோ?

ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)
An Unit of the e magazine Voice of Jagadguru)

அவனுக்குத் துக்கமே உண்டாகவில்லை. ஸதா ஸ்ரீஹரி தியானத்திலேயே மனதைச் செலுத்தினவனானதால் அவனுக்கு ஹிரண்யகசிபு செய்த மஹத்தான துக்க ஸாதனங்களில் ஒன்றும் பலிக்கவில்லை. இப்படித்தான் ஞானியும் இந்த துக்க ஸாதனமான பிரபஞ்சத்தினால் துக்கப்படுகிறதில்லை.

ஸ்ரீமதாசார்யாள் ஸந்யாஸம் வாங்கிக்கொள்ள வேண்டுமென்று. தன் தாயாருடைய அநுமதிகேட்ட போது அந்த அம்மாளுக்கு தன்னுடைய ஏக புத்திரன் ஸந்யாஸியாய்ப் போய்விட்டால் தான் என்ன செய்வதென்று தோன்றியதால் உடனே ஸம்மதம் கொடுக்கவில்லை. அப்பொழுது லோகோபகாரார்த்தமாக ஆசார்யாள் சொல்லியிருக்கிறார்கள்.

கதி நாம ஸுதா ந லாலிதா: கதி வா நேஹ வதூரபுஜ்மஹி |
க்வ சதே க்வ சதா: க்வ வா வயம் பவஸங்க: கலு பாந்த்த ஸங்கம: ||
(ஸ்ரீ சங்கர விஜயம் 5-53)

, இந்தமாதிரி எத்தனை பிள்ளைகளைப் பெற்று லாலனை செய்தாயிற்று. எத்தனை பையன். எத்தனை மனைவி, எத்தனை புருஷன்?." இம்மாதிரி அநுஸந்தானம் செய்தால் அவ்வளவு துக்கம் நமக்கு உண்டாகிறதோ? ஏதோ இப்பொழுதுதான் பிறந்ததாக நினைத்துக்கொள்ளுகிறோம். அதற்காக துக்கப்படுகிறோம். இது தான் இருக்கிறது, இதுவும் போய் விட்டால் என்ன செய்கிறது என்று துக்கம்? மறுபடியும் பிறக்கப் போவதில்லையோ? அப்படிப் பிறவாதிருக்க என்ன ஸத்கர்மாவைச் செய்து விட்டோம்! அப்படிப் பிறவாதிருக்கச் செய்திருந்தால் அதைப்பற்றி ஸந்தோஷப்பட வேண்டியதே தவிர துக்கத்திற்கு என்ன காரணம் இருக்கமுடியும்?

ஆதலால்தான் ஆஸ்திகர்களுக்கு நாஸ்திகன் போல அவ்வளவு துக்கம் உண்டாகிறதில்லை. ஒருத்தனுக்கு ஒரே பையன். மற்றவனுக்குப் பத்துப் பையன்கள் என்று வைத்துக்கொள்வோம். இப்பேர்ப்பட்ட இருவருக்குள் அந்த ஏகபுத்திரனுள்ளவனுக்கே புத்திர சோகம் ஜாஸ்தியாய் இருக்கும். அதேமாதிரி நாஸ்திகனுக்குத் தேஹமே ஆத்மாவாதலால் அவனுக்கு இந்த தேஹம் போனால் அதிக துக்கம் ஏற்படுகிறது. ஆஸ்திகனுக்கு அப்படியில்லை.

நாஸ்தி சேந்நாஸ்தி மே ஹானி: அஸ்தி சேந்நாஸ்திகோ ஹத: ॥

ஒருவன் ஓர் அறையில் புலி இருக்கிறதென்று சொல்கிறான். மற்றொருவன் இல்லை என்கிறான். புலி இருக்கிறதென்று தூரப்போவதால் யாதொரு கெடுதியும் இல்லை. இல்லையென்று நம்பி கிட்ட நெருங்கிவிட்டால் ஒருவேளை இல்லை என்பது வாஸ்தவமல்லாமல் போய்விட்டால் ஹானி ஏற்பட்டு விடுமல்லவா!

## ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)

An Unit of the e magazine Voice of Jagadguru)

நமோ ஏதோ கர்மங்களைச் செய்துகொண்டுதானே இருக்கிறோம். அதைச் சொன்னபடி செய்து விட்டால் என்ன தோஷம் வந்து விடப்போகிறது? இதை ஏன் தெரிந்து கொள்ளுகிறதில்லை ஜனங்கள்? இதையே வாஸிஷ்டத்தில்

அஸ்தி சேத் தத் ஸமுத்தீர்ணம் பவஸாகரம்

என்று சொல்லியிருக்கிறது. அந்த விசாரத்தினால் ஒன்றுமில்லை என்பது ஏற்பட்டுவிட்டால் எல்லாருக்கும் ஸுகம் கிடைக்கிறது. இருக்கிறது என்பது ஏற்பட்டால் பிறவிக்கடலைத் தாண்ட முடிகிறது.



மஹா ஜனோ யேன கத: ஸ பந்த்தா:

என்றபடி பெரியவாள் போன மார்க்கத்தில் போவதில் விசாரம் ஒன்றும் செய்யவேண்டியதில்லை. நிச்சயமாய் ஸுகம் வரும். ஸந்தேஹமே வேண்டாம்.

வேண்டுமென்றால் பரீக்ஷார்த்தமாகவாவது ஐந்து வருஷம் பெரியவாள் சொன்ன மார்க்கத்தில் போய்ப்பார்த்து ஸுகம் வராமற்போனால் பிறகு வேண்டுமென்றால் விட்டுவிடலாம். ஸந்தோஷம் வருகிறதா இல்லையா என்று பார்க்கட்டுமே ! சாஸ்திரம் பகவானுடைய வாக்கு. அவருடைய ஆக்ஞை. அவருடைய உத்திரவுப்படி நடந்தால் அவருடைய அநுக்ரஹம் கிடைக்கும். லோகத்தில் நமக்கு ஸுகம் வேண்டும் என்று தோன்றினால் என்ன செய்கிறோம்? யாரோ ஒரு பிரபுவை ஆசிரயிக்கிறோமல்லவா! அவருடைய ஸௌகரியம் தெரிந்து அவருக்கு ஹிதம் செய்து கொண்டே வந்தால் அவருக்கு மனம் இரங்கினால் நமக்கு ஸமஸ்தமும் கிடைக்கிறதல்லவா! இதில் நாம் செய்யவேண்டியது தாஸத்வம். அவ்வளவுதான். போகம் கொடுப்பது பிரபுவின் வசம் இருக்கிறது. அதுபோலவேதான் ஸர்வேசுவரனிடத்திலும். நாம் கர்மாக்களை அவன் சொன்னபடி செய்துகொண்டு வரவேண்டியது. அவன் ஸந்தோஷத்தைக் கட்டாயம் கொடுக்கிறான். அவன் துக்கரஹிதன், அவன் பிரபு, அவன் சக்தன். அவன் தன் தாஸர்களையும் துக்க ரஹிதர்களாகச் செய்யக் கங்கணம் கட்டிக் கொண்டிருக்கிறான். அவனைச் சரணமடைந்தவர்கள் தன்யர்கள்.

த்யக்த்வா மமாஹமிதி பந்தகரே பதே த்வே
மானாபமான ஸத்ருசா: ஸமதர்சினஸ்ச|
கர்த்தாரமன்யமவகம்ய ததர்ப்பிதானி
குர்வந்தி கர்ம பரிபாக பலானி தன்யா: ||

எவன் ஆதரவோடு ஈசுவரனை பஜனம் செய்கிறானோ அவன் கட்டாயம் முக்தனாகிறான். மிகவும் அல்ப பலமுள்ள லோகப்பிரபுக்களாலேயே விசேஷ ஸந்தோஷத்தை ஸம்பாதித்துத் தர முடியுமானால் ஸர்வேசுவரனால் என்னதான் ஆகாது? ஆகையால் ஸர்வேசுவரனிடத்தில் அநந்ய பக்தி செய்து



ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)
An Unit of the e magazine Voice of Jagadguru)

அவனுடைய ஆக்ஞாரூபமான ச்ருதி ஸ்மிருதி புராணங்களில் சொன்னபடி ஸத்கர்மானுஷ்டானம் செய்து கொண்டு வந்தால் நிச்சயமாய் துக்க நிவிர்த்தி ஏற்பட்டு ஸுகப்ராப்தியும் உண்டாகும். ஜனங்கள் எப்பொழுது வருவார்கள் என்று அவன் ஸதா காத்துக் கொண்டிருக்கிறான்.

பவானி த்வம் தாஸே மயி விதர த்ருஷ்டிம் ஸ கருணா -
மிதி ஸ்தோதும் வாஞ்சந் கதயதி பவாநி த்வமிதி ய: |
ததைவ த்வம் தஸ்மை திசஸி நிஜ ஸாயுஜ்ய பதவீம்
முகுந்த ப்ரஹ்மேந்த்ர ஸ்புட மகுட நீராஜிதபதாம்||

இப்படி ஏதோ கார்யார்த்தமாகச் சொன்ன வார்த்தையைக்கூட தனக்குச் சொன்னதாக வைத்துக்கொண்டு அம்பாள் நம்மைக் காப்பாற்ற காத்திருக்க, ஜனங்கள் வீணாக காலயாபனம் செய்துகொண்டு துக்கத்தை அநுபவித்தால் அதற்கு என்னதான் செய்யமுடியும்?

பிரதி தினமும் தனது லௌகிக அலுவல்களை ஆரம்பிப்பதற்கு முன் சாளக்ராமம், சிவலிங்கங்கள் மேல் இரண்டு உத்தரணி தீர்த்தத்தை விட்டு இரண்டு மூன்று துளஸீ தளங்களையோ பில்வ தளங்களையோ அதன்மேல் போட்டு கிடைத்த நிவேதனத்தை பகவதர்ப்பணம் செய்வதில் என்ன சிரமம்? நிவேதனத்திற்குக்கூட காத்திருக்க வேண்டியதில்லை. தீர்த்தம் கூடவா இல்லாமற் போய்விட்டது? அவனோ குடிக்கப் போவதில்லை. இதைச் செய்வதில் என்ன சிரமம்? சொல்வதற்கு வேண்டிய நேரங்கூட செய்வதற்கு வேண்டியதில்லையே? இரண்டு நிமிஷத்தில் செய்து விடலாம். பூஜா மந்திரங்கள் தெரியாதே என்று யோசிக்க வேண்டாம். ஸந்தியாவந்தனத்திலுள்ள மந்திரங்களே போதும். அதுவும் தெரியாத பேர்கள் அமந்த்ரமாய்ச் செய்தாலும்கூடப் பரவாயில்லை. அதுவே ஸமந்த்ரத்திற்கு வழிகாட்டி விடும். இப்படிச் செய்யப்பட்ட பூஜைக்கு என்ன பலம் வந்துவிடப் போகிறது என்று நினைக்கவேண்டாம். ஏதோ ஸ்வாமி தலையில் மூன்று பில்வத்தைப் போட்டு ஸ்வாமியை ஏமாற்றிவிட்டோம் என்று நினைக்கவும் வேண்டாம். அசஞ்சல பக்தியோடு செய்திருந்தால் பரலோக மோக்ஷ ஸாம்ராஜ்யமே வந்திருக்க வேண்டும். நம்முடைய பக்தி, சிரத்தைக் குறைவினாலும், நமது ஆசைகள் லௌகிக ஸுகத்தையே நாடினதாலும், அவைகள்தான் நமக்குக் கிடைத்தன. இந்த லௌகிக தனங்கள் எல்லாம் க்ஷுத்ரமான பலங்கள்தானே?

ஈசுவரனே நம்மை ஏமாற்றிவிட்டான் என்று வேண்டுமானால் சொல்லலாம். அதில் நியாயம் இருக்கிறது. ஏன்? நம்மிடத்தில் த்ருடதரமான பக்தியில்லாததால். பகவானுடைய பூஜையினால் வரக்கூடிய பலன் இவ்வளவு அவ்வளவு அல்ல.

அயுதம் நியுதம் வாபி

என்று சொல்லப்பட்டிருக்கிறது. பத்தாயிரம், லக்ஷம் மடங்கு பயன் தரக்கூடியது. எப்படிச் செய்தாலும் விக்ஷேபத்தைத் தடுத்து நல்லதைக் கொடுக்கிறதென்றால் நமக்கென்ன குறைந்து போகிறது? நான்கு ஐந்து பில்வதளங்கள் எடுத்து ஈசுவரன் தலைமேல் போடுவதில் என்ன சிரமம் இருக்கிறது? என்ன குறைந்து போகிறது? சீக்கிரத்தில் செய்யமுடிகிறது. அதன் பலன் கைவல்யமே வருகிறது. சித்தம் நிர்மலமாகிறது. இன்னும் என்ன வேண்டும்? 'சிவ சிவ' என்று சொல்லுவதில் என்ன சிரமம்? வீண் வார்த்தை பேசிக்கழிப்பதில் என்ன குணம்? சும்மா இருக்கும் காலத்திலாவது 'சிவ சிவ' என்று சொன்னால் என்ன நஷ்டம்? அனந்தமான சிரேயஸ் அல்லவா வரும்!

ஆதலால் பரீக்ஷார்த்தமாயாவது ஐந்து வருஷங்களுக்கு ஸந்த்யாவந்தனம், பிரஹ்மயக்ஞம், ஸ்வாமி பூஜை முதலியன செய்து வாருங்கள். ஸந்தோஷம் விருத்தியாகிறதா, இல்லையா என்று பாருங்கள். ஸந்தோஷம் வராமற்போனால் விட்டுவிடலாம். ஞானம் அடைய நிச்சயமாய் யோக்யதை வருகிறது. ஸ்வாமியை சரணமடைந்தால்தான் துக்கத்தைத் தாண்டலாம். வேறு வழி இல்லை. ஆகையால் இன்று முதலாவது எல்லாரும் அவரவர்கள் தர்மப்படி கர்மானுஷ்டானங்களைச் செய்து கொண்டு வந்தால் ஈசுவரனுடைய கருணைக்குப் பாத்திரமாய் ஸர்வசிரேயோபி விருத்தியையும் அடைந்து ஸகல ஸௌகர்யங்களையும் பெற்று சுகமாயிருக்கலாம்.

ஜகத்குரு ஸ்ரீ சந்திரசேகர பாரதீ மஹாஸ்வாமிகள் அவர்கள்

Our Mail ID : Info@voiceofjagadguru.com

## 12.நவம்பர் 2023 அன்று ஜகத்குரு ஸ்ரீ அபிநவ வித்யா தீர்த்த மஹாஸ்வாமிகள் அவர்களின் 106 ஆவது ஜெயந்தி (1917-1989)

# இறைவன்

சிஷ்யன் : ஈச்வரனைப் பார்க்க முடியாததால் சிலர் உண்மையில் ஈஸ்வரன் இருக்கிறானா, இல்லையா என்பதில் சந்தேகமடைகிறார்கள், அவர்ளின் மனதில் சிரத்தையை உண்டாக்குவதற்காக இறைவன் எப்படியாவது தானிருப்பதை அவர்களுக்குக் காட்ட முடியாதா?

ஆசார்யாள் : இறைவனே ஒரு சிக்கலில் மாட்டிக் கொண்டிருக்கிறான் போலிருக்கிறது. அவன் ஒருவனுக்குக் காட்சியளிக்க விரும்பினால் ஏதோ ஓர் உருவத்தைப் பெற்றுக் கொள்ள வேண்டும். உருவத்தை கண்டவுடன், சந்தேகமுள்ளவன் 'உனக்கு உருவம் இருக்கிறது. எல்லா இடத்திலும் இல்லை. அதனால் நீ இறைவனாக இருக்க முடியாது' என்று கூறிவிட வாய்ப்பு இருக்கிறது. அதேசமயம் இறைவன் அவர்களுக்கு முன்பு உருவத்தைப் பெற்றுக் கொண்டு

## ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)

An Unit of the e magazine Voice of Jagadguru)



தரிசனம் தராமலிருந்தால் சந்தேகமிருப்பவர்களில் வேறு சிலர், "நாம் இறைவனைக் காண முடிவதில்லை. ஆகையால் இறைவன் என்று ஒருவன் இல்லை' என்று நினைத்துக் கொள்ளலாம். ஆக, இறைவன் உருவத்தைப் பெற்றுக் கொண்டாலோ, பெற்றுக்கொள்ளாவிட்டாலோ இப்படி சிலர் ஈச்வரன் இருப்பதை நம்பாமலிருக்கிறார்கள். இச்சூழ்நிலையில் இறைவன் என்னதான் செய்ய முடியும்?

உலகில் வேற்றுமையிருக்கிறது. ஆகையால் நாஸ்திகர்களின் கோஷ்டியும் இருக்கிறது. சிரத்தையை மக்களிடம் உண்டாக்கலாம் மேலும் வளர்க்கலாம். ஆனால், பலாத்காரமாக ஒருவன் மனதில் சிரத்தையை உண்டாக்குவதற்காக முயற்சி செய்வதில் பிரயோஜன மில்லை. யுக்திகளைக் கூறலாம். பல பக்தர்களின் உண்மையான அனுபவங்களை எடுத்துக் காட்டலாம். பல அபூர்வமான உண்மை நிகழ்ச்சிகளையும், உதாரணங்களையும் கொடுக்கலாம். சாஸ்திரங்களில் தெரியப்படுத்தப்பட்டதையும் கூறலாம். ஆனாலும் இறைவன் இருக்கிறான் என்று ஒருவன் நம்பாவிட்டால் யார் என்ன செய்ய முடியும்?

சி : இறைவனைப் பக்தன் காண முடியுமா?

ஆ : உருவத்துடன் காணலாமா என்று கேட்கிறாயா?

சி : ஆம்.

ஆ : இறைவனுக்கு உருவமில்லாவிட்டாலும் பக்தர்களுக்காக அவன் உருவத்தைப் பெற்றுக் கொள்ளலாம். ஆதலால் அளவில்லாத பக்தியிருந்தால் இறைவன் பெற்றுக்கொண்ட உருவத்தை நாம் நிச்சயமாகப் பார்க்கலாம். இங்கு சந்தேகத்திற்கிடமில்லை.

சி : இறைவன் பெற்றுக்கொண்ட உருவத்தை வெறும் மனதால் பார்க்க முடியும் என்று சொல்கிறீர்களா, அல்லது கண்களாலும் காணமுடியும் என்று சொல்கிறீர்களா?

ஆ: இரண்டு வகைகளிலும் காட்சியளிப்பதற்கு இறைவன் சாமர்த்திய முள்ளவன்.

சி : அதாவது இறைவனைப் பார்க்கலாம், இறைவனிடம் பேசலாம், இறைவனைத் தொடலாம் என்பதையா ஆசார்யாள் கூறுகிறார்கள்?

## ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)

An Unit of the e magazine Voice of Jagadguru)

ஆ : ஆம், அவ்வளவு பக்தியிருந்தால் இறைவன் காட்சியளிப்பார். காட்சியளித்தால் அவனிடம் ஏன் பேச முடியாது?

சி : கலியுகத்திலுமா இவ்வாறு செய்யலாம்?

ஆ : இறைவனைப் பக்தியுள்ளவன் காண்பதற்கும் கலியுகத்திற்கும் என்ன சம்பந்தம்?

சி : எவன் இறைவனின் தரிசனத்தைப் பெறலாம்?

ஆ: எவன் இறைவனைத் தவிர வேறொன்றையும் விரும்பவில்லையோ அவன் இறைவனைக் காணலாம். அளவில்லாத பக்தி இறைவை நம்மிடம் வரும்படிச் செய்கிறது.

சி : இறைவன் விஷயத்தில் ஒருவனுக்கு ஏற்பட்ட அனுபவம் உண்மையா இல்லையா என்பதை ஒருவன் எவ்வாறு அறிய முடியும்?

ஆ : எவனுக்கு உண்மையான அனுபவம் ஏற்பட்டிருக்கிறதோ அவனுக்கும் இதுபோன்ற சந்தேகம் ஏற்படாது.



சி : மற்றவர்கள் இருக்கிறார்களே, அவர்களுக்கு அவனுடைய அனுபவம் சித்தப் பிரமையினாலோ தனக்குத் தானே ஏமாற்றிக் கொண்டதாலோ இருக்கலாம் என்று கருதலாமே?

ஆ : எவனுக்கு அனுபவம் ஏற்பட்டிருக்கிறதோ, மற்றவர்கள் அதை ஏற்றுக் கொண்டாலோ,--ஏற்றுக் கொள்ளாவிட்டாலோ அவனுக்கு என்ன நஷ்டம்? மக்கள் ஒப்புக் கொள்வதோ, மக்கள் ஒப்புக் கொள்ளாமலிருப்பதோ, அனுபவம் அடைந்தவனின் அனுபவத்தை ஒருவகையிலும் பாதிப்பதில்லை. இப்படியிருந்தாலும் உன் கேள்விக்குச் சற்று நேரடியான பதிலையே கூறுகிறேன். இறைவன் பக்தனுக்குக் காட்சியளிக்கும்போது பக்தனிடம் பழமோ மற்ற பொருட்களோ கொடுத்துவிட்டுப் போகிறான் என்று வைத்துக் கொள்வோம். இறைவன் மறைந்த பிறகும் பழம் சிஷ்யனுக்கிருந்தால் அவ்வனுபவம் உண்மையானது என்று அறிந்து கொள்ளலாம். இதுபோன்ற அனுபவம் பக்தனுடைய மனநிலையை மாற்றிவிடும். அனுபவம் சற்று நேரத்திற்கே இருந்தாலும் அதன் பலன் நீண்ட காலம் இருக்கிறது. மேலும் இறைவனின் விஷயத்தில் அனுபவம் பெற்றுக்

கொண்டவர்கள் மற்றவர்களுக்கு ஊக்கமளிப்பதற்குச் சாமர்த்தியம் உள்ளவர்களாக ஆகிவிடுகிறார்கள்.



இறைவன் விஷயத்தில் அனுபவம் பெற்ற ஒருவன் நல்ல ஆரோக்யத்துடனும், மனநிலையுடனும் இருக்கிறான் என்று வைத்துக்கொள்வோம். அவனுக்குத் திடீரென்று சித்தப்பிரமை ஏன் வர வேண்டும்? ஒருவன் தனக்குத் தானே ஏமாற்றிக் கொள்ள வேண்டுமென்றால் எப்போது வேண்டுமானாலும் ஏமாற்றிக் கொள்ளலாம். ஒருவனுக்கு விசேஷமான அனுபவங்கள் எப்போது வேண்டுமானாலும் கிடைப்பதில்லை. இம்மாதிரி ஆராய்வதன் மூலம் உண்மையான அனுபவத்திற்கும், தன்னைத்தானே ஏமாற்றிக் கொள்வதற்கும் உள்ள வித்யாசத்தைக் காணலாம்.

சி : இவ்வுலகில் இவ்வளவு துன்பங்கள் எதற்காக இருக்கின்றன? இவ்வுலகை இறைவன் படைத்ததால் துன்பங்களுக்கு அவன் காரணமாக மாட்டானா?

ஆ : ஒருவன் தான் செய்த செயல்களால்தான் துன்பங்களை அனுபவிக்கிறான். ஒருவனது செயல்கள் பலனளித்தே தீர வேண்டும். இம்மாதிரி முற்பிறவியில் செய்யப்பட்ட கர்மா பலனளிப்பதால் ஒருவன் இப்பிறவியில் துன்பங்களை அனுபவிக்கிறான். மனிதர்களுக்கு சாஸ்திரங்களின் கட்டளையைப் பின்பற்றி வாழ்வதற்கோ, சாஸ்திரங்களின் கட்டளையை மீறுவதற்கோ, சுதந்திரம் இருப்பதால், இறைவன் துன்பங்களுக்குக் காரணம் என்று சொல்வது தவறு. மனிதன் தன் செயல்களின் பயனாக புண்ணியத்தையோ, பாவத்தையோ அடைகிறான். இறைவன் செயல்களின் பலன்களை அளிக்கிறான். அவ்வளவு தான்.

முற்பிறவியில் செய்த பாவம்தான் நமக்கு இப்பிறவியில் துன்பம் உண்டாக்குகிறது எனச்சொன்னால் முற்பிறவியில் ஒருவன் துன்பம் அனுபவித்ததற்குக் காரணம் என்னவென்று கேட்கலாம். இதற்குப் பதில் 'அதற்கும் முன் பிறவியில் செய்த கர்மா' என்பதேயாகும். ஸம்ஸாரத்திற்கு (பிறப்பு - இறப்புச் சக்கரத்திற்கு) ஆரம்பமில்லாததால், நாம் ஒருவிதமான கர்மாவும் செய்யாமல் வாழ்க்கையை ஆரம்பித்த போதிருந்த முதல் பிறவி எது எனக் கேட்பது சரியாகாது. முன் கல்பத்தில் இருந்ததை இறைவன், ஒவ்வொரு கல்பத்தைப் படைக்கும்போதும் வெளிப்படுத்துகிறானே தவிர, புதிதாகத் தானாகவே ஒன்றும் உண்டாக்குவதில்லை.

சி : இறைவன் நடந்ததையும், நடப்பதையும், நடக்கப்போவதையும் அறிந்தவனென்று கூறப்பட்டுள்ளது. இறைவன் மனிதர்களுக்கு வருங்காலத்தில் என்ன நடக்கும் என்று தெரிந்து கொண்டவனாகியிருந்தால் மக்கள் என்ன செய்வார்கள் என்பதும் இப்போதே தீர்மானமாகியிருக்க வேண்டும். அப்படியிருந்தால் விதியின் கட்டளையின் படித்தானே மனிதன் நடந்தாக


வேண்டும்? விதியின் கட்டளைப்படி நடக்காமல் மீறி நடந்து கொள்ளலாமென்றால் இறைவனால், நடக்கப் போவதைத் தீர்மானிக்க முடியாது என்று ஆகும். அப்படியிருந்தால் இறைவனை எல்லாவற்றையும் அறிந்தவனென்று எப்படிக் கூறுவது?

ஆ : உண்மையில் உலகம் மாயையால் ஏற்பட்டிருக்கிறது. இறைவன் மாயையை ஆள்பவன். எல்லாம் இறைவன் விரும்பியபடியே நடை பெறுவதால், அவன் விருப்பத்திற்கு இணங்கித்தானிருக்கிறது. அவனின் விருப்பம்தான் மனிதர்களின் சொந்த இச்சையைப்போலும் விதியைப் போலும் தெரிகிறது. இவ்வாறு கருதினால் இறைவன் எல்லாவற்றையும் அறிந்து கொண்டவன், மேலும் விதியின்படியே எல்லாம் நடைபெற வேண்டியதுமில்லை என்ற இரண்டையும் குழப்பமில்லாமல் புரிந்து கொள்ளலாம்.

ஒருவன் தன் பரீட்சைக்காகப் படிக்கவேயில்லை என்று வைத்துக் கொள்வோம். அப்படிப்பட்டவன் தேர்வில் வெற்றி பெறமாட்டான் என்பதை நிச்சயமாகக் கூற முடியாதா? இதுபோல் ஒருவன் கூற முடியும் என்பதால் மாணாக்கனுக்கு, தேர்வுக்கு முன்னர் படிப்பதற்கோ அல்லது படிக்காமலிருப்பதற்கோ சுதந்திரம் இல்லை என்று கூற முடியுமா? நிச்சயம் முடியாது. அதேபோல்தான் இறைவன் தான் படைத்தது அனைத்தையும் நன்கு புரிந்து கொண்டிருக்கிறானென்று கருதினாலும் இறைவன் எல்லாவற்றையும் அறிந்தவனென்று கூறுவதில் கஷ்டமொன்றுமிருக்காது.

ஜகத்குரு சங்கராசார்யர் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ மஹாஸந்நிதானம் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ பாரதீ தீர்த்த மஹாஸ்வாமிகள், ஜகத்குரு சங்கராசார்யர் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ ஸந்நிதானம் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ விதுசேகர பாரதீ மஹாஸ்வாமிகள் அவர்களின் பொற்பாதங்களில் சமர்ப்பிக்கிறோம்